# அதிபர்கள் எதிர் நோக்கும் தலைமைத்துவம்சார் பிரச்சினைகள்: மட் / படுவான்கரை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**தக்ஷ்ஷாயினி இ.**[140]

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு பாடசாலையினை விளைதிறன் உள்ள பாடசாலையாக அபிவிருத்தி செய்வதில் அதிபரின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறான அபிவிருத்திக்கு சிறந்த தலைமைத்துவப்பண்பு அவசியமாகின்றது. சிறந்த தலைமைத்துவம் என்பது ஒரு நோக்கை அடைய "ஒரு சொல் அல்லது செயலினால் மற்றவர்களை அந்நோக்கை அடையச்செய்ய எடுக்கும் ஆற்றல்" என்பதாகும். இந்த ஆற்றல் ஒரு பாடசாலை அதிபருக்கு முழுமையாக இருக்குமெனில் அப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் எவ்வித தடைகளும் ஏற்படமாட்டாது. இருந்தும் பிரதேசரீதியாக நோக்கும் போது பாடசாலைகளின் அபிவிருத்தியினை அதிபர்களின் தலைமைத்துவம்சார் அம்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வது பொருத்தமானதாக தோன்றுகின்றது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் பௌதீகவள, மனிதவள தேவைகளைப் போதியளவிற்கு பெறமுடியாமல் இருப்பதும் இப்பாடசாலைகளின் வெளியீடுகளில் சிறந்த நிலையை எட்டுவதில் அதிபர்களின் பங்கு இன்றியமையாததாகக் காணப்படுவதும் இவ்வாய்வுக் களமாக அமைகின்றது. எனவேதான் அதிபர்கள் எதிர்நோக்கும் தலைமைத்துவம் சார் பிரச்சினைகளை இனங்காண்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:**. விளைதிறன், அபிவிருத்தி, தலைமைத்துவம்

## 1. அறிமுகமும், பின்னணியும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்விசார் பிரச்சினைகளில் பிரதானமானவை கிராம, நகர வேறுபாட்டை ஒட்டியதாகவே காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 கல்வி வலயங்களில் பட்டிருப்பு கல்வி வலயமும் ஒன்றாகும். இவ்வலயமானது தென் எருவில் பற்று, பட்டிப்பளை, போரதீவுப்பற்று எனும் மூன்று பிரதேச பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் போரதீவுப்பற்று பிரதேசமானது அதிகளவு கிராமங்களை உள்ளடக்கிய போதிய வசதிகளற்ற படுவான்கரைப் பிரதேசம் என்று அழைக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் 38 கிராமங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளன. மொத்தமாக 45436 மக்கள் வாழ்கின்றனர். விவசாயம், மீன்படி போன்ற கூலித் தொழில்களே பிரதானமாகக் காணப்படுவதுடன் அரச தொழிலில் ஈடுபடுபவர்கள் மிகவும் குறைந்தளவானவர்களாகவே காணப்படுகின்றார்கள். நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் 1000 - 3000 வரையில் மாதாந்த வருமானம் பெறுபவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், என்பன மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படும் இப்பிரதேசமானது யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசமாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ஐந்து 1C பாடசாலைகள் , ஏழு வகை II பாடசாலைகள், இருபது வகை III பாடசாலைகள் உட்பட மொத்தமாக 32 பாடசாலைகள் காணப்படுகின்றன. இப்பிரதேச ரீதியாக கற்றல் அடைவுகள், பாடசாலை அபிவிருத்தி, பரீட்சைப் பெறுபேறுகள் என்பன மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கு இப்பிரதேச யுத்த சூழ்நிலையும் ஒரு காரணமாகும்.

2000ம் ஆண்டு தொடக்கம் 2006ம் வரையான காலப்பகுதிகளில் இப்பிரதேசம் யுத்தத்தினால் பாதியளவு பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனால் மாணவர்கள் அதிகளவு இடைவிலகியமை, இளவயது திருமணங்கள், மக்களின் இடப்பெயர்வு, சூழல் பின்னணி, மக்களுக்கு ஏற்பட்ட பயம், போன்ற காரணங்களால் இப்பிரதேசத்தில் கல்வி மட்டுமல்லாது அனைத்து செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டது. அதனால் இப்பிரதேசத்தில் கல்வி நிலை மிகவும் பின்னடைந்து சென்றதுடன் பாடசாலைகளும் வீழ்ச்சியடைந்தமை ஒரு முக்கிய பிரச்சினையாகும். அவ்வாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்த நிலையில் இருக்கும் பாடசாலைகளை

To whom correspondence should be addressed: thakshaa8184@gmail.com

[140] Lecturer, Department of Education and Child Care, Eastern University, Sri Lanka.

அபிவிருத்தி செய்வதில் அதிபர் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார் என்பதை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

ஒரு பாடசாலையினை விளைதிறன் உள்ள பாடசாலையாக அபிவிருத்தி செய்வதில் அதிபரின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறான அபிவிருத்திக்கு சிறந்த தலமைத்துவப்பண்பு அவசியமாகின்றது. சிறந்த தலமைத்துவம் என்பது ஒரு நோக்கை அடைய "ஒரு சொல் அல்லது செயலினால் மற்றவர்களை அந்நோக்கை அடையச்செய்ய எடுக்கும் ஆற்றல்" என்பதாகும். இந்த ஆற்றல் ஒரு பாடசாலை அதிபருக்கு முழுமையாக இருக்குமெனில் அப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் எவ்வித தடைகளும் ஏற்படமாட்டாது. இருந்தும் இப்பிரதேசரீதியாக நோக்கும் போது பாடசாலைகளின் அபிவிருத்தியினை அதிபர்களின் தலமைத்துவம்சார் அம்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்வது பொருத்தமானதாக தோன்றுகின்றது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் பௌதீகவள, மனிதவள தேவைகளைப் போதியளவிற்கு பெறமுடியாமல் இருப்பதும் இப்பாடசாலைகளின் வெளியீடுகளில் சிறந்த நிலையை எட்டுவதில் அதிபர்களின் பங்கு இன்றியமையாததாகக் காணப்படுவதும் இவ்வாய்வுக்குரிய பின்னணியைத் தோற்றுவிக்கின்றது.

## 2. ஆய்வின் நோக்கங்கள்

1. படுவான்கரைப் பிரதேசத்தில் தற்போதைய பாடசாலைச்சூழல் பின்னணியை அறிதல்.
2. இப்பிரதேசத்தில் அதிபர்கள் எதிர்கொள்கின்ற தலைமைத்துவம்சார் பிரச்சினைகளை அறிதல்.
3. அதிபர்களின் தலமைத்துவம்சார் பிரச்சினைகள் பாடசாலைகளை எந்தளவிற்கு பாதிக்கின்றன என்பதை அறிதல்.
4. பாடசாலைகளை விளைதிறன் உள்ள பாடசாலையாக உருவாக்குவதில் அதிபருக்குள்ள இடர்பாடுகளை அறிதல்.

## 3. ஆய்வு முறையியல்

விடய ஆய்வு முறையியலைப் பின்பற்றியதாக இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

### 3.1 மாதிரித்தெரிவு

32 பாடசாலைகளின் அதிபர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

### 3.2 தரவு சேகரித்தல் கருவிகள்

பேட்டிகாணல், ஆவணங்கள் என்பனவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## 4. தரவுகளின் பகுப்பாய்வு

### 4.1 அபிவிருத்தி நோக்கிய பாடசாலைகளின் இயல்புகளும், அதிபரின் தலைமைத்துவமும்

ஒவ்வொரு பாடசாலைக்கும் பொதுவான தேசிய மட்ட நோக்கங்களை எய்துவதற்காக தமது நிறுவன மட்டத்தில் கட்டியெழுப்பிக் கொண்ட சிறப்பு நோக்கங்களை எய்துகின்ற பாடசாலைகள் விளைத்திறன் மிக்க அபிவிருத்தியடைந்த பாடசாலைகள் எனப்படும். விளைத்திறன் மிக்க பாடசாலைகளின் இயல்புகள் பின்வருவனவாக காணப்படுகின்றன.

1. மிக உயர்மட்டமான எதிர்பார்ப்புக்களை அடிப்படையில் கொண்ட கலாச்சாரம் ஒன்று கட்டியெழுப்பப்பட்டிருத்தல்
2. அதிபரானவர் மிகவும் இயக்கப்பாடான, தொழில்சார்ந்த போதனைத் தலைவராக கடமையாற்றுதல்
3. பாடசாலை எனும் அமைப்பு மிகவும் உயர்வான கொள்கை இலக்குகளை நோக்கி அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்.
4. தனது பாடசாலைக்கே உரித்தான சிறப்பான தலைமைத்துவ நோக்குடன் பாடசாலையின் சகல நடவடிக்கைகளையும் வழிப்படுத்துதல்
5. திட்டமிடப்பட்ட பாடவிதானத்தை நடைமுறைப்படுத்தும் கோலத்தின் தெளிவான உயர்வான அடைவு மட்டத்தினை நோக்கி கவனம் செலுத்துதல்
6. ஒவ்வொரு மாணவரினதும் கல்வி தொடரின் அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கல்விச் சூழ்நிலை பாடசாலையில் நிலவுதல்

7. பாடசாலையினுடைய ஒவ்வொரு மாணவனும் பாடசாலையிலே ஈடுபடுவதற்குரிய விசேட காரணம் ஒன்று காணப்படல்
8. பாடசாலையினுடைய அபிவிருத்திக்கு பொருத்தமானவாறு மாணவர் அடைவு உயர் மட்டத்தில் நிலவுதல்

போன்ற அம்சங்கள் காணப்பட்டால் மட்டுமே அவை அபிவிருத்தியை நோக்கிச்செல்லும் பாடசாலையாகும். இவ்வாறான தன்மைகள் கொண்டதாக இப்போரதீவுப் பற்றுப் பிரதேசப் பாடசாலைகள் இல்லை என்பதே இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்தமைக்கான காரணமாகும்.

அதிபர் என்பவர் பாடசாலைச் சூழலில் உள்ள கல்விசார் சாரா நடவடிக்கைகளை நெறிப்படுத்துபவரும் கண்காணிப்பவருமான ஒரு தனிநபர் ஆவார். அவர் தனது தலைமைத்துவச் செயற்பாடுகளை வரையறை செய்துகொள்ள பின்வரும் கடமைகளை ஆற்ற வேண்டியவராகின்றார். அவையாவன,

1. பாடசாலை முகாமைத்துவமும், மேற்பார்வையும்
2. பாடசாலை நிர்வாக விடயங்களை கவனித்தல்
3. பாடவிதானம் தயாரித்தல்
4. பாடசாலை நேரசூசி தயாரித்தல்
5. புறக்கிருத்திய விடயங்களை ஒழுங்கு செய்தல்
6. கற்பித்தல் முறையினை திட்டமிடுதல்

போன்றனவாகும். இவ்வாறான பண்புகளைக் கொண்டு ஒரு அதிபர் செயற்படும் போதே அவரின் தலமைத்துவம் சிறப்பானதாக அமையும்.

**4.2 யுத்த அனர்த்தத்தின் பாதிப்புகளும், அதிபரின் தலைமைத்துவம்சார் பிரச்சினைகளும்**

போரதீவுப் பற்று பிரதேசத்தை எடுத்து நோக்கும் போது அங்கு பாடசாலைகளின் தரம் மிகவும் தாழ் நிலையிலேயே காணப்படுகின்றது. 2000ம் ஆண்டு தொடக்கம் 2006ம் ஆண்டு வரை இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாடசாலைச் செயற்பாடுகள் மிகவும் வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்படுகின்றன. இக்காலப்பகுதியில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வீதம் மிகவும் குறைவாகக் காணப்பட்டதுடன் இடைவிலகல் மிகவும் கூடுதலாக காணப்பட்டது. யுத்தம் காரணமாக மாணவர்களை இடை விலக்கி இளவயது திருமணங்கள் செய்து வைக்கப்பட்டுள்ளதுடன் கூலித்தொழில், மத்தியதர நாடுகள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டமையால் இப்பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீதம் வீழ்ச்சியடைந்தது. அத்துடன் ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு வருவதற்கு விரும்பாத காரணத்தினால் ஆளணிப் பற்றாக்குறை, பௌதிக வளப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் பாடசாலைகளினை மீண்டும் தூக்கி நிறுத்துவது என்பது மிகவும் கடினமான விடயமாகவுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் யுத்தம் இல்லை என்றாலும் பாடசாலைகளை விளைத்திறன் மிக்க பாடசாலையாக உருவாக்குவதில் அதிபர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். யுத்த சூழல் காரணமாக அதிகமான மாணவர்கள் இடைவிலகியதாலும், மக்கள் வேறு பிரதேசங்களை நோக்கி இடம் பெயர்ந்தமையாலும் இப்பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களும் வேறு பிரதேசங்களுக்கு செல்ல முடியாத வறுமையான மக்களுமே இப்பிரதேசத்தில் வசிக்கின்றமையால் கற்றலில் மிகவும் பின்னடைவான நிலையில் உள்ள மாணவர்களே அப்பாடசாலைகளில் கல்வி கற்கின்றார்கள். இம்மாணவர்கள் கற்றலில் பின்னடைவாக இருப்பதுடன் இவர்களுக்கு போதுமான வசதிகள் எதுவுமே கிடைக்கப் பெறுவதுமில்லை.

தரம் 5ம் புலமைப்பரீட்சையில் சித்திபெற்றால் அப்பிள்ளையை நகர்ப்புற பாடசாலைக்கு மாற்றி விடுகின்றமையும், இப்பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைப்பிரிவு மட்டுமே காணப்டுவதால் க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளில் கற்பதற்கு க.பொ.த உயர்தரத்திற்கு வேறு பிரதேசப் பாடசாலைக்கு செல்வதாலும் இப்பிரதேச பாடசாலைகளின் பெறுபேறுகள் மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகின்றன. இதன் காரணமாக இப்பிரதேச பாடசாலை

அதிபர்களுக்கு தங்களது பாடசாலையை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்வது பாரிய சவாலாக அமைகின்றது.

மேலும் இப்பிரதேச பாடசாலைக்கு ஆசிரியர்கள் வருவதற்கு தயக்கம் காட்டுவதால் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் இப்பாடங்களின் பெறுபேறுகளும் இப்பாடசாலைகளில் தாழ்நிலையில் உள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இவ்வாறான பாடங்களின் பெறுபேறுகள் குறைவடைந்து செல்வதனாலும் பாடசாலையின் அபிவிருத்தி வீழ்ச்சி நிலையில் காணப்படுகிறது. அத்துடன் கிராம நகரப் புறங்களுக்களுக்கிடையில் வளங்கள் பகிரப்படுவதில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. நூலக வசதியின்மை, ஆய்வுகூட வசதியின்மை, இணைப்பாட விதான செயற்பாடுகளுக்குரிய உபகரணங்கள் இன்மை, தொழில்நுட்ப வசதியின்மை போன்ற காரணங்களும் பாடசாலையை அபிவிருத்தி செய்ய வைப்பதில் அதிபருக்கு சவாலாக அமைகின்றன.

இப்பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தூர இடங்களில் இருந்து வருகை தருபவர்களாக காணப்படுகின்றார்கள். இதனால் ஆசிரியர்கள் லீவு எடுக்கும் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் போதுமானளவு போக்குவரத்து வசதிகள் இன்மையால் வாகனங்கள் வரும் நேரத்திற்கு ஆசிரியர்கள் வீட்டுக்குச் சென்று விடுகிறார்கள். அதனால் பாடத்திட்டம் ஒழுங்கான நேரத்திற்கு முடிக்கப்படுவதில்லை. மேலும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் ஏதுவும் இடம்பெறுவதில்லை. இதனால் ஏனைய பிரதேச பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது இப்பிரதேசப் பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. ஏனெனில் கற்றல் அடைவுகள் பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் வீதம் என்பன மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாலாகும்.

இப்பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டிகள், தமிழ்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள் என்பன மட்டுப்படுத்தப்பட்டளவில் நடத்தப்படுகின்றன. காரணம் அதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்மையும் போதிய வளங்கள் இன்மையுமாகும். இதனால் இவ்வாறான போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் வீதம் குறைவாகக் காணப்படுகிறது. அத்துடன் திறமையான மாணவர்கள் அனைவரும் வேறு பாடசாலைகளுக்கு இடம் பெயர்ந்து செல்வதும் ஒரு காரணமாகும். இதனால் ஏனைய பிரதேச பாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு இப்பாடசாலைகளை முன்னேற்றுவது அதிபருக்கு பிரச்சினையாக காணப்படுகின்றது.

பாடசாலைத் தலைவர் என்ற வகையில் பாடசாலை நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து முன்னெடுப்பதில் பாடசாலை அமைவிடப் பின்னணிகள் அதிபருக்கு சவாலாக அமைகின்றன. அதிக தொலைவில் இருந்து பாடசாலைக்கு வருவதால் தங்களுக்கு உடல், உளப்பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. அத்துடன் பாடசாலை முடிந்ததும் குறிப்பிட்ட நேரத்திற்கு தங்களது சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் பாடசாலை முடிந்த பின்பு பாடசாலையின் பிரத்தியேக செயற்பாடுகள் செய்வதற்கு நேரம் கிடைப்பதில்லை. இதனால் அனைத்து செயற்பாடுகளும் பாடசாலைக்குரிய நேரத்தில் செய்ய வேண்டி இருப்பது அதிபருக்கு வேலைப்பழுவைத் தோற்றிவிக்கின்றது.

மேலும் பாடசாலைகள் அபிவிருத்திக்கு அதிபரின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமோ அதேயளவு சமூகம் பங்களிப்புச் செய்ய வேண்டும். பாடசாலைச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் சமூக அங்கத்தவர்கள் செயற்படுகின்றார்களே தவிர அப்பாடசாலைக்குரிய அபிவிருத்திக்குரிய எந்தவிதமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில்லை. அத்துடன் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் நலன்புரிச் சங்கம் என்பனவற்றின் பங்களிப்புகள் இப்பாடசாலைக்கு மிகக் குறைவாகவே கிடைக்கின்றன.

மேலும் இப்பிரதேச மாணவர்களுக்கு கற்றலில் ஈடுபாடு குறைவாகக் காணப்படுகின்றது. சுயதொழிலில் காட்டும் நாட்டம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதில் ஈடுபாடு, இளவயது திருமணங்கள் போன்ற செயற்பாடுகள்

அதிகரித்து காணப்படுவதால் கல்வி பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாறு ஆர்வம் இல்லாத மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்திச் செல்வதும் அதிபருக்கு சவாலாக அமைகின்றது.

அதே போன்று இப்பிரதேச மக்களும் போதியளவு படிப்பறிவற்றவர்களாகவே காணப்படுகின்றார்கள். பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் இவர்களின் பங்கு குறைவானதாகவே உள்ளது. அன்றாடம் உழைத்து வரும் பணத்தை உணவுத் தேவைகளுக்கும் தங்களது உடற் களைப்பைப் போக்கிகொள்ள மது அருந்துவதற்கும் பயன்படுத்துகின்றனரே தவிர பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்கு சேமிக்கும் பழக்கம் இவர்களிடம் காணப்படவில்லை. பாடசாலை சமூகத்துடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் பெற்றோர் இருப்பதும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு தொடர்பாக எவ்வித ஊக்குவிப்புக்களும் வழங்காமல் இருப்பதும் இப்பிரதேசத்தில் உள்ள குறைபாடாகும்.

1983ம் ஆண்டு தொடக்கம் 2006ம் ஆண்டு வரை இருந்த யுத்தம் காரணமாக இப்பிரதேசத்தில் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இருந்தும் இப்பிரதேசத்தில் கல்வி ஓரளவு முன்னேற்றமடைந்து சென்றாலும் 2000ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய யுத்த அனர்த்தங்கள் இப்பிரதேசத்தினை பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கியது. அதாவது அக்காலப்பகுதியில் இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தங்கியிருந்தமையினால் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டன. அவர்கள் தங்கியிருந்த இடங்களிலுள்ள பாடசாலையில் தற்காலிகமாக தங்களின் கல்வியினை இப்பிரதேச மாணவர்கள் முன்னெடுத்துச் சென்றதனால் முறையான கற்பித்தல் செயற்பாடு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இவ்வாறு பலமாத காலம் கற்றலை இடைநிறுத்தியிருந்த மாணவர்களே மீண்டும் இப்பிரதேசத்திற்கு வந்து குடியேறி இப்பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கின்றார்கள். இதனால் இப்பிரதேச பெறுபேறுகள் குறைவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். சிறந்த பெறுபேறு பெறக்கூடிய மாணவர்கள் அனைவரும் வேறு பிரதேச பாடசாலைகளை நோக்குச் சென்றமையால் தற்போதைய காலப்பகுயில் இப்பிரதேசத்தில் கல்வி அடைவுகள் பின்னடைவாக இருப்பதுடன் பாடசாலையை முன்னேற்றுவதும் அதிபருக்கு பாரிய சவாலாக அமைகின்றது. இவ்வாறான விடயங்களே இப்பிரதேச அதிபருக்கு பாடசாலைகளை அபிவிருத்தி நோக்கி முன்னெடுப்பதில் பிரச்சினைகளாக அமைகின்றன. எனவே இவற்றுக்குரிய தீர்வு ஆலோசனைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**5. தீர்வுகளும், ஆலோசனைகளும்**

அதிபர்கள் பாடசாலைத் தலைவர்கள் என்ற பொறுப்பில் குவிந்த கண்காணிப்பையும் அதிக நேரத்தையும் பாடசாலைக்காகச் செலவு செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர். இதனால் அவர்கள் உந்துருளியில் பயணம் செய்வதும் அதிக வேலைப் பழுவைத் தாங்கியிருப்பதும் பிரச்சினைக்குரியதாகும். அதனால் அவர்களுக்கு விடுதி வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆளணி, பௌதிக வளங்களின் பற்றாக்குறைகள் பாரியளவில் இப்பிரதேசப் பாடசாலைகளில் உள்ளன. இதில் விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம், நீர்வழங்கல் மற்றும் மலசலகூட வசதி, கணணி அறை, போதியளவு வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், மின்சார வசதி என்பன பிரதான இடம் வகிக்கின்றன. இவற்றை வலயக் கல்வித்திணைக்களம் அமைச்சு மட்டத்திலும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் தயார்படுத்தி செயற்திட்டங்களைச் சமர்ப்பித்து பெற்றறெடுக்க வேண்டும். அத்துடன் தேவையான பாடங்களுக்குரிய ஆசிரியர்களை பெறுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதுவரை தேவையான பாடங்களுக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அயல் பிரதேச பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை பகுதி நேரத்திற்காவது பெற்று பாடங்களை மாணவர்களுக்கு திறமையாக கற்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிப்பதுடன் பாடசாலையை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் அதன் விருத்தியில் அக்கறை மிக்க சமூக அங்கத்தவர்கள் காணப்படுவர். அத்தகையோர்களில் பலமான சமூக அங்கத்தவர்களை பாடசாலை அதிபர்கள் இனங்கண்டு பாடசாலை அபிவிருத்திக்காக ஆலோசனைகள், உதவிகளைப் பெற்றுக்கொள்ள முனைப்புடன் ஈடுபடுதல் வேண்டும். எனவே

பழைய மாணவர் சங்ககங்களைச் சார்ந்தோரும் உயர் கல்விப் பின்னணியையும், அர்ப்பணிப்புணர்வும் கொண்ட அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அப்போதுதான் அவர்களால் பாடசாலை அதிபர்களின் தலமைத்துவ வினையாற்றலுக்கும் பக்கபலமாக இருக்க முடியும்.

மேலும் பிரதேச பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமது பாடசாலைச்சூழல், வரலாறு, அடைவுகள், ஆசிரியர், மாணவர் விபரம் பாடசாலை நிகழ்வுகளை உள்ளடக்கியதான இணையத்தளம் ஒன்றை பாடசாலைகளின் பெயரில் உருவாக்குதல் நற்பலன்களைத் தரும். இதனால் உள்ளூர் வெளியூர் பாடசாலைப் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து பாடசாலை அபிவிருத்திக்கு உதவிகளைத் திரட்டிக்கொள்ள முடியும். இதுவும் பாடசாலை அபிவிருத்திக்கு பயனளிக்கும்.

மேலும் இப்பிரதேச மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெற்றோருக்கு கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் இப்பிரதேச மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு வசதிகள் விசேட கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை பழைய மாணவர் சங்கம், பட்டதாரிகள் சங்கம் ஆகியோரின் உதவியுடன் அதிபர்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பாடசாலை சூழல் சார்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமான இணைப் பாடவிதான செயற்பாடுகளை அதிபர்கள் இனங்கண்டு அவற்றின் அடைவை வலயமட்ட, மாகாண மட்ட, தேசியமட்ட ரீதியாக உயர் பெறுபேறுகளை பெறச் செய்தல் வேண்டும். இதனால் பாடசாலை ஒன்றை நாடு பூராகவோ அல்லது மாவட்டம் பூராகவோ இனங்காணச் செய்வதுடன் உயர் நிலைக்கு இட்டுச் செல்ல பொருத்தமான இணைப்பாட விதானச் செயற்பாடுகள் உதவும். அதனால் பாடசாலைகள் வெளியிலிருந்து பல உதவிகளைப்பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான செயற்பாடுகளைச் செய்வதனூடாக அதிபர் தமது பாடசாலைகளை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்லமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அனந்தராஜ். ந. (2006) பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள், குமரன் அச்சகம், கொழும்பு -12
2. சின்னதம்பி. மா. (2006) பாடசாலை முகாமைத்துவம் சமகாலத்தேவைகள், விஸ்டம் பப்ளிஷேர்ஸ், கொக்குவில்
3. கமலநாதன். தி. (2007) அதிபரின் வகிபாகம், யுனிஆர்ட்ஸ் பிறைவெட் லிமிரெட் கொழும்பு.
4. Leapart Davis it foster aliceg (2003) power full leadership development corwin press Inc California
5. செல்வராஜா. மா. (1995), கல்விக் கொள்கையும் முகாமைத்துவமும் யுனிவேர்சல் பிரினிடேர்ஸ், ஹட்டன்.